செ.வெ.எண்: 641.　　　　　　　　　　　　2/8/2010.

## கூட்டுறவுச் சங்கங்களில்
## மருந்துக் கடை

கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 50 மருந்து கடைகள் 2010–2011 ஆம் ஆண்டு திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதனையொட்டி இன்று (2–8–2010) திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம் மூலமாக 6 மருந்து கடைகளும், காஞ்சிபுரம் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையின் மூலமாக 5 மருந்து கடைகளும், பூங்காநகர் கூட்டுறவு மொத்தவிற்பனைப் பண்டகசாலையின் மூலமாக 3 மருந்து கடைகளும் திறக்கப்படுகின்றன.

திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் காமதேனு கூட்டுறவுச் சிறப்பங்காடி பெயரில் பெசன்ட் நகர், இராயப்பேட்டை, தேனாம்பேட்டை, அசோக்நகர், ராஜா அண்ணாமலைபுரம் மற்றும் கீழ்ப்பாக்கம் ஆகிய ஆறு இடங்களில் குளிர்பதன வசதியுடன், கணினி மூலம் பட்டியல் இடும் வசதியுடன் கடைகள் இன்றுமுதல் செயல்பட தொடங்கும்.

காஞ்சிபுரம் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை சார்பில் தாம்பரம், பம்மல், போரூர், செம்பாக்கம் மற்றும் மடிப்பாக்கம் ஆகிய ஐந்து இடங்களிலும், பூங்காநகர் கூட்டுறவு மொத்த விற்பன்னப் பண்டகசாலை சார்பில் அண்ணாநகர், திருமங்கலம் மற்றும் பாடி ஆகிய மூன்று இடங்களிலும் மருந்துக் கடைகள் குளிர்பதன வசதியுடன் இன்று திறக்கப்படுகின்றன.

இதில் தேனாம்பேட்டை மருந்தகம் 24 மணி நேரமும் செயல்படும். மற்ற கடைகள் காலை 9.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை செயல்படும்.

பிற மருந்து கடைகளை விட குறைவான விலையில் (அதிகபட்ச சில்லறை விற்பனை விலையில் 15% தள்ளுபடியுடன்) மருந்துகள் விற்பனை செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஆறாயிரம் வகையான அலோபதி மருந்துகளோடு சித்த, ஆயுர்வேத, யுனானி ஆகிய இந்திய மருந்துகளும் இவற்றில் விற்பனை செய்யப்படும்.

அறிவிக்கப்பட்ட 50 மருந்து கடைகள் போக மற்றவை வருகின்ற செப்டம்பர் மாத இறுதிக்குள் தொடங்கப்படும். இவற்றின் நடைமுறையைப் பார்த்து தேவைப்படின் அதிகமான கடைகள் திறக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.